புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.Chinthamanisilks.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 நவம்பர் 07, 2019 புரட்சி 18 முழக்கம் 43 விலை: ரூ.3.00

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி – திரிபுவாதிகளுக்கு பதில்

# திருக்குறளுக்கு மாநாடு நடத்தி மக்களிடம் கொண்டு சென்றவர், பெரியார்

*பெரியார் குறளை எதிர்த்தார் என்று திரிபுவாதம் பேசும் பா.ஜ.க. – சங் பரிவாரங்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னையில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு நடத்திய திருக்குறள் விளக்கப் பொதுக் கூட்டத்தில் நிகழ்த்திய உரை சரியான பதில் அளித்திருக்கிறது. வள்ளுவர் – ஓர் இந்து; திருக்குறள் – ஓர் இந்து மத நூல் என்று இப்போது பா.ஜ.க.வினர் பேசுவதற்கு முன்பாகவே அக். 16இல் சென்னை அம்பத்தூரில் நிகழ்த்திய உரை:*

பெரியாரை தமிழின விரோதி, தமிழ் மொழி விரோதி, தமிழ் இலக்கிய விரோதி என்று ஒரு கூட்டம் ஒருபக்கம் பேசிக் கொண்டிருக்கிற வேளையில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு நடத்திய திருக்குறள் மாநாட்டைப் பற்றி, அதனுடைய விளக்கக் கூட்டமாக இந்த பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. 1949இல் பொங்கலை ஒட்டி நடந்த 2 நாள் திருக்குறள் மாநாட்டில்தான் எல்லா தமிழறிஞர்களையும் இணைத்து திருக்குறளை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்கிற முன்னெடுப்பை பெரியார் எடுத்தார். அந்த நினைவாகத்தான் 70 ஆண்டுகள் கழித்து திருக்குறள் மாநாட்டை நாம் நடத்தினோம். பெரியாரை ஏற்றுக் கொண்டவர்களே பெரியார் குறளுக்கு எதிரி என்பதைப்போல காட்டினார்கள். தோழர் பொழிலன் சொன்னதைப் போல, பெரியார் வீட்டில் நடந்த ஒரு சம்பவத்தை சொல்ல வேண்டும். பெரியார் பொதுவாழ்க்கைக்கு வருவதற்கு முன்னால், தன்னுடைய தங்கை மகளுக்கு மறுமணத்தை நடத்தி வைக்கிறார். ‘விதவா விவாகம் விலக்கம்’ என்று நூல் எழுதப்படுகிறது. அந்த நூலைப்பற்றி மதிப்புரை எழுதும்போதுதான் பெரியார் அவர் வீட்டில் நடந்ததைப் பற்றி சொல்கிறார். “எங்கள் வீட்டிலும் இதுபோன்ற ஒரு திருமணம் நடந்தது. நான் கன்னட பலிஜா நாயுடு சமூகத்தை சார்ந்தவன். எங்கள் வீட்டில் மறுமணம் செய்யும் பழக்கம் இல்லை. கோஷா போடுகிறவர்களாக இருந்தார்கள்” என்று சொல்லி விட்டு அந்த திருமணம் பற்றி பெரியார் சொன்னார்.

அதைப்போல போகிற போக்கில் திருக்குறளைப் பற்றி எங்காவது திறனாய்வாக சொல்லியிருப்பார். திருக்குறள் மாநாட்டு உரையில் பெரியார் சொன்னார், “தொடக்கக்காலம் முதல் என்னுடைய நண்பர்கள், குறிப்பாக பா.வே மாணிக்க நாயக்கர் அடிக்கடி என்னிடம் பேசுவார். உரையாசிரியர்களின் உரையைப் படித்ததால் எனக்கு திருக்குறள் மீது கொஞ்சம் வெறுப்புணர்வு இருந்துகொண்டே இருந்தது. உரையாசிரியர்கள் தவறான விளக்கத்தை அளித்திருந்ததால் அந்த வெறுப்புணர்வு இருக்கத் தான் செய்தது. ஆனால் காலப்போக்கில் அதை நான் உணரத் தொடங்கினேன்” என்று பேசுகிறார்.

நமக்கெல்லாம் எதைக்காட்டினாலும் பார்ப் பனர்களைத்தான் உயர்வாகக் காட்டியிருக்கிறார்கள். வள்ளுவரே பார்ப்பனருக்கு பிறந்தவர் என்பதால் அவருக்கு அறிவு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அறம் என்றால் என்ன என பரிமேலழகர் சொன்ன விளக்கத்தை பார்ப்பனர்கள் எல்லாம் தூக்கிக் கொண்டாடினார்கள்.

“மனு முதலிய நூலோர் விதித்தன செய்தலும் விளக்கென ஒலிதலுமாம் விலக்கியென” மனு சொன்னதை செய்வது அறம், மனு வேண்டாமென சொன்னதை செய்யாமலிருப்பதும்தான் அறம் என்று சொன்னார் பரிமேலழகர். அப்படியென்றால் 4 ஜாதிகளையும் ஏற்றுக்கொண்டதாகத்தான் குறள் இருக்கமுடியும். ஆனால் வள்ளுவர் அப்படி எழுதவில்லை. அதேபோல ஒழுக்கம் என்றால் என்ன? “பார்ப்பனர் முதலான வர்ணத்தார் தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளையும், ஆசிரமங்களையும் முறையாகப் பின்பற்றுவதுதான் ஒழுக்கம்” என்று பரிமேலழகர் எழுதுகிறார். அந்தந்த வருணத்தார் அவரவருக்கு உரிய கருமங்களை செய்ய



**யாரெல்லாம் புறஞ்சேரியில் தங்கி இருந்தார்கள் என சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாட்டு பாடும் பார்ப்பனர்கள் எல்லாம் ஜாதியில் இருந்து தள்ளி வைக்கப்பட்டனர்.**

வேண்டுமென பரிமேலழகர் விளக்கவுரை எழுதினார்.

திருக்குறளுக்கு இப்படி தவறான உரையை எழுதினார்கள் என்றுதான் பெரியார் பேசினார். மக்களுக்கு சரியான உரையை கொண்டுசேர்க்க வேண்டுமென்று பெரியார் விரும்பினார். அந்த மாநாட்டிலேயே ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக் குழுவினர் திருக்குறளுக்கு உரை எழுதி சரியான உரையை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் புலவர் குழந்தை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகிய 2 பேர்தான் உரை எழுதினார்கள். இவர்கள் இருவருமே பெரியாரின் இயக்கத் தோழர்களாக இருந்தவர்கள். ஆனால் அந்த பெரியார் இயக்கம்தான் தமிழுணர்வுக்கு எதிராக இருந்தது, தமிழுணர்வை மழுங்கடித்தது என்று சிலர் இப்போது பேசித் திரிகிறார்கள்.

‘ஆயிரம் உண்டு இங்கு ஜாதி, எனில் அந்நியர் வந்து இங்கு புகல் என்ன நீதி?’ என்று பாரதியார் சொன்னார். அதற்குப் பெரியார், “ஆயிரம் உண்டிங்கு ஜாதி, எனவே அந்நியர் புகுவதுதான் நீதி” என்று சொன்னார். தனித்தனியாகப் பிரிந்து கிடந்தால் அந்நியன் ஆளாமல் என்ன செய்வான் என்று பாரதியாருக்கு பெரியார் பதில் சொன்னார். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் சொன்னார். ஆனால், “இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்” என்று எங்கள் வள்ளுவர் சொன்னார். ஒருவர் பிச்சையெடுத்துதான் சாப்பிட வேண்டுமென்று சொன்னால், இந்த உலகத்தை உண்டாக்கியவன் ஒழியட்டும், அப்போதுதான் பிச்சை ஒழியும் என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் சொன்னார் என பெரியார் பேசினார். வள்ளுவரைப் பார்த்ததும், போற்றியதும், அவரைப் பற்றி பரப்பியதும் இந்த அடிப்படையில்தான்.

பெரியாருக்கு பிடித்த குறள்கள் பலவற்றை அவ்வப்போது சொல்லுவார். ‘குடிசெய்வார்க்கில்லை பருவம் மடிசெய்து மானங் கருதக்கெடும்’ என்ற குறளை எடுத்துக்காட்டாக சொல்லுவார் பெரியார். அதாவது “பொது வாழ்க்கைக்கு வருபவனுக்கு சோம்பேறித்தனம் இருக்கக்கூடாது. பொது வாழ்க்கைக்கு வந்தபிறகு மானம் பார்க்கக் கூடாது. தன்மானத்தை விட இனமானம் பெரியது” என்ற தத்துவத்தைதான் பெரியார் சொல்லிக்கொடுத்தார். எனவே வள்ளுவத்திற்கு சரியான விளக்கம் கொடுத்தவராக பெரியார் இருக்கிறார்.

கடவுள் வாழ்த்தைப் பற்றி வ.உ.சி. எழுதினார். திருக்குறளில் முதல் 3 அதிகாரமும் திருக்குறளுடன் சேர்ந்தது அல்ல என்று வ.உ.சி. கூறினார். ஆனால் கடவுள் என்ற சொல் திருக்குறளில் எங்கே இருக்கிறது? கடவுள் வாழ்த்தை நடுவில் வந்த யாரோ திணித்துவிட்டார்கள் என்று பெரியார் சொன்னார். கடவுள் வாழ்த்து அதிகாரத்தின் தலைப்பை பண்புச்சிறப்பு என்று மாற்றிதான் பெரியார் திருக்குறளை வெளியிட்டார். ஆறு அணா என்ற குறைந்த விலைக்கு அச்சடித்து திருக்குறளை வெளி யிட்டார் பெரியார். ஆயிரக்கணக்கில் விற்பனை யானது. விற்பனைக்கு சென்ற 3 நாள் கழித்து நாங்கள் விலையை தவறாக கணக்கிட்டுவிட்டோம், அடக்க விலை 5 அணா தான் வருகிறது. எனவே தோழர்கள் ஒரு அணா குறைத்து விற்க வேண்டும் என பெரியார் அறிக்கை விடுக்கிறார். பெரியார் கஞ்சன், கணக்குப் பார்ப்பார் என்பார்கள், ஆனால் திருக்குறள் அதிகாமானவர்களிடம் போய் சேரவேண்டும் என அவ்வளவு அக்கறை இருந்தது பெரியாரிடத்தில் என்பதைப் பார்க்கவேண்டும்.

இலக்கியம் என்றாலே கம்பராமாயணம் என்று சொல்லிக்கொண்டிருந்தபோது, திருக்குறளை மக்களுக்கு பரப்பினார் பெரியார். கருத்து வளர்ந்துகொண்டே இருக்கும் என்ற சிந்தனை உடையவர் பெரியார். அறிவு வளர்ந்துகொண்டே இருக்கும், மாறிக்கொண்டே இருக்கும். பெரியாரின் சிறந்த சொற்பொழிவுகள் நான்கை இணைத்து பெரியார் காலத்தில் ஒரு நூல் வெளியிட்டார்கள். அந்த நூலுக்கு தலைப்பு அறிவின் எல்லை. பெரியாரிடம் அதைக்கொடுத்தபோது அறிவுக்கு ஏது எல்லை என்று அந்த நூலை தூக்கி கீழே வீசினார். அதுபோல குறள் பற்றியும் அவருக்கு மாற்றுக் கருத்து எழுந்திருக்கும். அதற்காக முற்று முழுதாக மறுத்துவிட்டதாகவும், எதிரி போலவும் நம்மவர்களே பெரியாரை காட்டுகிறார்கள்.

இன்றைக்கு பார்ப்பனர்கள் சங்கீத வித்வான்களாக உள்ளனர். சங்கீதமே அவர்களுடையது என்கிறார்கள். காங்கிரஸ் மாநாடு நடத்தி, அதில் சங்கீத நிகழ்ச்சி நடத்தி, அதில் மீதமான பணத்தைக் கொண்டு Music Academy கட்டினார்கள். ஆனால் அதில் இன்றைக்கு காங்கிரசுக்கு சொந்தமில்லை. பார்ப்பனர்கள் எல்லா இடத்தையும் பிடித்துக் கொள்வார்கள். சிலப்பதிகாரத்தில் புறஞ்சேரி இறுத்த காதை என்று ஒன்று உள்ளது. யாரெல்லாம் புறஞ்சேரியில் தங்கி இருந்தார்கள் என அதில் சொல்லப்பட்டிருக்கிறது. பாட்டு பாடும் பார்ப் பனர்கள் எல்லாம் அதில் ஜாதியில் இருந்து தள்ளி வைக்கப்பட்டனர். ஏனென்றால் இசைப் பாட்டு பாடுவது மனுதர்மத்தில் இல்லை. “வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப் புரிநூல் மார்பர் உறைபதிச் சேர்ந்து” என அதில் சொல்லப் பட்டிருக்கிறது. பார்ப்பனர்கள் பாட்டு பாடியது வேதத்திற்கு எதிரானது என்று சொல்லி, அந்த பார்ப்பனர்களை ஊருக்கு வெளியே வைத்தார்கள், அந்த இடம்தான் சேரி என்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு எல்லா சங்கீத சபையையும் பார்ப்பனர்கள் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அவரவர் விருப்பத்திற்குத்தான் குறள் விளக்கம் கொடுத்திருப்பார்கள்.

1930 ஈரோடு சுயமரியாதை மாநாட்டில் ஒரு மாநாடு சங்கீத மாநாடு. பார்ப்பனர் அல்லாத சங்கீத கலைஞர்களின் பெயர்களை எல்லாம் குடிஅரசு ஏட்டில் பட்டியலிடுகிறார். தமிழர்கள் எல்லோரும் இனி இந்த கலைஞர்களையே அழைத்து நிகழ்ச்சி நடத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் வைக்கிறார். அந்தக் கலைஞர்களை வைத்து மாநாட்டில் இசைக்கச்சேரி நடத்துகிறார். பார்ப் பனரல்லாத இசைக்கலைஞர்கள் அந்த காலத்தில் எப்படி அவமதிக்கப்பட்டார்கள் என்பதைப் பற்றி அந்த மாநாட்டில் பெரியார் பேசினார். அப்போது மாலை போட வந்தால் கூட பாட்டு பாடியவருக்கு போடாமல், மிருதங்கம் வாசிக்கும் பார்ப்பனர் களுக்கு போட்ட பிறகு கடைசியாகத் தான் போடுவார்கள்.

திருவாவடுதுறை இராஜரத்தினம் தன்னுடைய நிகழ்ச்சிகளில் பட்டு சட்டை, அங்கவஸ்திரம் அணிந்துதான் நாதஸ்வரம் பாடுவார். அது அந்தக் காலத்தில் பெரிய புரட்சி. ஓர் இசைக் கலைஞன் தோளில் துண்டு போடுவதற்கே பெரியார் இயக்கம் போராட்டம் நடத்தியுள்ளது. அதற்குப்பின்னால் திராவிட இயக்க மேடைகளில் எல்லோருக்கும் துண்டு போட்டார்கள். அந்தந்த ஊரில் யாரெல்லாம் கீழ்ச்சாதி என்று கருதப்பட்டு தோளில் துண்டு அணியக்கூடாது என்று இருந்ததோ அந்த தோழர்களை எல்லாம் மேடையில் ஏற்றி ஏற்றி துண்டு அணிவித்தார் பெரியார்.

(தொடரும்)

# அயோத்தி தீர்ப்பு: என்ன நடக்கப் போகிறது?

உச்சநீதிமன்றம் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடம் எவருக்கு உரிமை உடையது என்பது குறித்து தீர்ப்பை வழங்க இருக்கிறது. தீர்ப்பு வருவதால் நாட்டில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை உருவாகாமல் தடுப்பதற்கு முன்னேற்பாடுகள் நடக்கின்றன. தமிழக முதல்வரை அழைத்தும் ஆளுநர் பேசி இருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் தீர்ப்புக்குப் பிறகு கொண்டாட்டங்கள் எதையும் நடத்த வேண்டாம் என்று சங்பரிவாரங்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். தலைவர் நடத்திய இந்தக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் பலரும் பங்கேற்றுள்ளனர்.

அயோத்திப் பிரச்சினையைப் பொறுத்தவரை அதன் கடந்தகால வரலாறுகள் ஓர் உண்மையை உணர்த்துகின்றன. நீதி - சட்டம் என்ற அமைப்புகளை முடக்கி ‘கும்பல் வன்முறைகளே’ தீர்மான சக்திகளாக செயல்பட்டிருக்கின்றன.

1949ஆம் ஆண்டு நள்ளிரவில் பாபர் மசூதி வளாகத்தில் அத்துமீறி நுழைந்து, இராமன், சீதை பொம்மைகளை மசூதிக்குள் போட்டு மசூதி சுவரில் இராமன் உருவத்தை படமாக வரைந்தார்கள். அப்போதே அத்துமீறி நுழைந்த குற்றத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இராமன் தானாக தனது பிறந்த இடத்தில் சுயம்புவாக தோன்றினான் என்று பரப்பிய கற்பனைக் கதையும் சட்ட மீறல்களும்தான் இறுதியில் ஏற்கப்பட்டன. வெற்றி பெற்றது கும்பல் வன்முறை.

அதைத் தொடர்ந்து மசூதியில் பிரச்சினைக்குரிய இடம் மூடப்பட்டது. அதை இந்துக்களின் வழிபாட்டுக்குத் திறந்து விட வேண்டும் என்று தொடர்ந்து விசுவ இந்து பரிஷத், கலவரங்கள் நடத்தியது. அதற்குப் பணிந்து 1989ஆம் ஆண்டு பூட்டப்பட்ட பகுதி திறந்து விடப்பட்டது. இப்போதும் சட்டம் பதுங்கியது. கும்பல் வன்முறையே வெற்றி பெற்றது.

1992 டிசம்பரில் ‘கரசேவை’ செய்யப் போவதாக பா.ஜ.க. தலைவர் கூறினார்கள். உ.பி. முதல்வராக இருந்த கல்யாண் சிங், நீதிமன்றத்தில் மசூதிக்கு எந்த சேதமும் ஏற்படாமல், கரசேவை நடக்கும் என்று உறுதி அளித்தார். உறுதி மொழிகள் காற்றில் பறந்தன. அத்வானி முரளி மனோகர் ஜோஷி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்போடு, ‘கும்பல் வன்முறை’ தான் வெற்றி பெற்றது. மசூதி தரைமட்டமாக்கப்பட்டது. மசூதியை இடித்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு 27 வருடங்களாக ஆமை வேகத்தில் நகர்கிறது. ஒருவர்கூட கைது செய்யப்படவில்லை. ஆனால் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமன் கோயில் கட்டுவதற்கான நில உரிமை வழக்கை உச்சநீதிமன்றம் தீவிரமாக விசாரணை நடத்தியது. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் நவம்பர் 17ஆம் தேதி ஓய்வு பெறப் போவதால் அதற்குள் வழக்கு விசாரணையை முடிக்க வேண்டும் என்று ‘கெடு’ நிர்ணயித்துக் கொண்டார்கள்.

விசாரணையின் 37ஆவது நாளில் இஸ்லாமியர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராஜீவ் தவன் நீதிபதிகளிடம் ஒரு சந்தேகத்தை எழுப்பினார். “நீதிமன்றம் அடுக்கடுக்கான கேள்விகளை இஸ்லாமியர் தரப்பினரிடம் மட்டும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. நாங்களும் விளக்கம் தருகிறோம். ஆனால் எதிர்தரப்பில் நீதிமன்றம் இப்படி கேள்விகளை எழுப்புவதில்லையே?” என்று கேட்டார். உடனே எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கிட்டு, “இப்படிப்பட்ட கேள்விகள் அவசியமற்றவை (unwaranted)” என்று கூறினார்.

இப்போது தீர்ப்பு வரப் போகிறது. இஸ்லாமியர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வந்தாலும், அங்கே மீண்டும் மசூதியை கட்ட விடுவார்களா அல்லது கும்பல் வன்முறையில் தடுத்து நிறுத்துவார்களா? என்ற கேள்வியும் எழுந்து நிற்கிறது. ‘பெரும்பான்மை இந்துக்கள்’ என்ற போலியான ‘மெஜாரிட்டி வாத’த்தை முன் வைத்து ‘கும்பல் கலாச்சாரமே’ இதுவரை வெற்றி பெற்று வந்திருப்பதுபோல இப்போதும் நடக்குமா?

சட்டமும் நீதியும் அதன் கடமையை செயல்படுத்துமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# திருவள்ளுவர் – ‘இந்து’வா?

தஞ்சை அருகே பிள்ளையார்பட்டியில் திருவள்ளுவர் சிலையை சிலர் அவமதித்துள்ளனர். திருவள்ளுவருக்கு ‘காவி அடையாளம்’ தந்து ஒரு பா.ஜ.க. பிரமுகர் முகநூலில் பதிவிட்டதைத் தொடர்ந்து இந்த சிலை அவமதிப்பு நடந்திருக்கிறது.

திருவள்ளுவர் ஓர் இந்து என்றும், திருக்குறள் இந்து மத நூல் என்றும் பா.ஜ.கவினர் தொலைக்காட்சி விவாதங்களில் பேசி வருகிறார்கள்.

திருவள்ளுவர் காலத்தில் இந்து மதம் என்ற ஒன்றே கிடையாது; இறந்து போன சந்திரசேகரேந்திர சரசுவதி என்ற காஞ்சி மூத்த சங்கராச்சாரி என்ன கூறுகிறார்?

“அவன் (வெள்ளைக்காரன்) மட்டும் இந்து என்று பெயர் வைத்திருக்காவிட்டால் ஒவ்வொரு ஊரிலும் சைவர், வைணவர், சாக்தர், முருக பக்தர், எல்லை அம்மனைக் கும்பிடுபவர் என்று நம்மைப் பிரித்துக் கொண்டு தனித் தனி மதமாக நினைத்துக் கொண்டிருப்போம். சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒரே சாமி இருக்கிறாரா? இல்லை... வைணவர்களுக்கு சிவன் சாமியே அல்ல; சைவர்களிலும் தீவிரவாதிகள் விஷ்ணு சாமியே அல்ல, சிவன்தான் சாமி, விஷ்ணு சிவனுக்குப் பக்தன் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இரண்டு பேரையும் எப்படி ஒரு மதம் என்று சொல்வது? வெள்ளைக்காரன் நமக்கு இந்துக்கள் என்று பொதுப் பெயர் வைத்தானோ நாம் பிழைத்தோம். அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது.” (ஆதாரம்: ‘தெய்வத்தின் குரல்’)

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில்தான் ‘இந்து’ என்ற பெயர் சூட்டப்பட்டது; வள்ளுவர், எப்படி ‘இந்து’ வானார்? அவர் பிரிட்டிஷ் ஆட்சி நடக்கும்போதுதான் பிறந்தார் என்று கூறப் போகிறார்களா?

பெரியார் ஒருவரைத் தவிர அத்தனை தலைவர்களையும் ‘இந்து’வாக்கிவிட்டது ‘சங்பரிவார்’ பார்ப்பனியம்!


இப்போது திருவள்ளுவரையும் விட்டு வைக்கவில்லை.

### கழக ஏட்டிற்கு நன்கொடை

புதுக்கோட்டையைச் சேர்ந்த இளங்கோவன் - தமிழன்பு இணையர் தங்கள் மகள் இளந்தமிழ் பிறந்த நாள் மகிழ்வாக கழகத்தின் வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு ரூ.1500/- நன்கொடை அளித்துள்ளனர்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கியது

# பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியனுக்கு மதிப்புறு முனைவர் பட்டம்



பேராசிரியர் நா. வானமாமலையின் மாணவரும், நாட்டார் வழக்காற்றியல், வாய்மொழி வரலாறு, அடித்தள மக்கள் வரலாறு, பொருள்சார் பண்பாடு போன்ற துறைகளில் பெரும் பங்காற்றி வருபவருமான பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் (ஆ.சி.) அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் (D.Lit.) வழங்கப்பட்டது. 22.10.2019ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் ஆ.சி.க்கு இப்பட்டம் வழங்கப்பட்டது. தமிழியல் ஆய்வுப் புலத்தில் 50 ஆண்டு கால அயராத பணிக்குக் கிடைத்த அங்கீகாரம் இது. தேர்ந்த களஆய்வு, பரந்தபட்ட நூலறிவு, அறிஞர்களுடன் நடத்தும் விவாதங்கள், உழைக்கும் மக்கள் சார்பு ஆகியவை அவருடைய தனித்தன்மை. எந்த விருதையும் அவர் தேடிச் சென்றதில்லை. அவருக்கு கல்விப்புலம் சார்ந்த இவ்விருதினை வழங்குவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பெருமை சேர்த்துக் கொண்டது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்போம். பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

ஆ. சிவசுப்பிரமணியன் 1960ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் தமிழியல் ஆய்வுப் புலத்தில் அடியெடுத்து வைத்தவர். தமிழக நாட்டார் வழக்காற்றியல், பொருள்சார் பண்பாடு, தமிழ்க் கிறித்தவம், வாய்மொழி வரலாறு, அடித்தள மக்கள் வரலாறு, தமிழ் இலக்கியம் போன்ற துறைகளில் அவர் ஏராளமான பங்களிப்புகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

ஆ. சிவசுப்பிரமணியன், பேராசிரியர் நா. வானமாமலையிடம் தமிழியல் ஆய்வு முறையியல்களைக் கற்றுக்கொண்டார். நா.வா. தொடங்கிய நெல்லை ஆய்வுக் குழுவில் தொடக்க காலம் முதல் செயல்பட்டு வந்தவர். தமிழகத்தில் ஒரு புலமைத் துறையாக 1960களில் கருக்கொள்ளத் தொடங்கிய நாட்டார் வழக்காற்றியலுக்குள் நா. வானமாமலையால் ஆற்றுப்படுத்தப் பட்டார். களப்பணிகள் மூலம் தரவுகளைச் சேகரித்து, வகைப்படுத்தி, பகுப்பாய்வு செய்யும் முறையை நா.வா.விடம் ஆ. சிவசுப்பிரமணியன் கற்றுக் கொண்டது ஆய்வுலகில் அவரைச் சிறப்புடன் தனித்துக் காட்டுகிறது. நாட்டார் வழக்காற்றியல் புலத்தை உருப்படுத்தியதோடு, தமிழியல் வட்டாரத்தில் அத்துறையை வேர்ப்பிடித்து வளரச் செய்தவர்களில் ஒருவராகவும் திகழ்கிறார்.

1970கள் முதல் தமிழியல் ஆய்வுலகில் முனைப்புடன் இயங்கத் தொடங்கிய இவர், இன்று வரை நன்கு அறியப்பட்ட ஆய்வாளராக இருக்கின்றார். இவர் விரிந்த ஆழமான வாசிப்புப் பழக்கம் கொண்டவர் என்பதை இவருடைய எழுத்துக்கள் மெய்ப்பிக்கின்றன. மரபுவழிப்பட்ட வரலாற்று முடிவுகளையும் எழுத்துக்களையும் விசாரணைக்கு உட்படுத்தி, மக்களின் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு அடித்தள மக்கள் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யும் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். இவர் எழுதிய ஆய்வு நூல்கள் இவ்வகையைச் சார்ந்தவை. ஆய்வுக்குப் பயன்படும் வகையில் அடித்தள மக்களின் வழக்காறுகளைப் பதிப்பித்துள்ளார். வெகுசனத் தேவைகளுக்காகக் குறுநூல்களை எழுதியுள்ளார்.

நாட்டார் வழக்காற்றியல் புலத்தில் முன்னும் பின்னும் சமகாலத்திலும் நிகழ்ந்தவற்றை ஆ. சிவசுப்பிரமணியன் நேர்மையோடு பதிவு செய்வதோடு மதிப்பீடும் செய்கிறார். நாட்டார் பண்பாட்டு உருவாக்கம் இவரின் தனித்தன்மையான ஆய்வுப்புலம். நாட்டார் தெய்வங்கள் (பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, தர்க்கா வழிபாடு), வாய்மொழி வழக்காறுகள் (வாய்மொழிக் கதைகள், சாமியாடும் மனைவி), நம்பிக்கைகள், சடங்குகள் (ஆடிப்பாவை, மழைச் சடங்குகள், மந்திரம் சடங்குகள்), பொருள்சார் பண்பாடு (உப்பிட்டவரை, தோணி, பனை மரமே... பனைமரமே, ஓட்டப்பிடாரம் கத்தரிக்காய், விளக்குமாறாகும் தாவரங்கள், தாவர வழக்காறுகள்) அடித்தள மக்களின் வாழ்வியல் போன்றவற்றில் கூர்மையான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

வரலாற்றுப் புலத்துக்கு ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடத் தகுந்த பங்களிப்புகளைச் செய்துள்ளார். தற்போது வழக்கிலிருக்கும் வரலாறுகளின் போதாமையை அவர் நன்கு உணர்ந்ததால் வாய்மொழி வரலாறு, கீழிருந்து வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தல், வரலாற்றை இடைமறித்தல், உள்ளூர் வரலாற்றை எழுதுதல், சமூக வரலாற்றையும் பண்பாட்டு வரலாற்றையும் அரசியல் பார்வையுடன் அணுக வேண்டியதன் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். அவர் எழுதிய ‘பொற்காலங்கள்’, ‘அடிமை முறையும் தமிழகமும்’, ‘வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும்’, ‘ஆஷ் கொலையும் இந்தியப் புரட்சி இயக்கமும்’, ‘வ.உ.சி வாழ்வும் பணியும்’, ‘தமிழ் அச்சுத் தந்தை அண்ட்ரீக் அடிகளார்’, ‘அடித்தள மக்கள் வரலாறு’, ‘கோபுரத் தற்கொலைகள்’, ‘ஆகஸ்ட் போராட்டம்’, ‘சமபந்தி அரசியல்’, ‘பிள்ளையார் அரசியல்’, ‘தமிழக வண்ணார் – வரலாறும் வழக்காறுகளும்’, ‘பிராமண போஜனமும் சட்டிச் சோறும்’ போன்ற வரலாற்று நூல்கள் முக்கியமானவை. ஏறக்குறைய பத்தாண்டுகளாக “உங்கள் நூலகம்” மாத இதழில் முக்கியமான வரலாற்று நூல்களை அறிமுகப்படுத்தும் பணியினைத் தொடர்ந்து செய்து வருகிறார்

வரலாற்றறிஞர்களால் கண்டுகொள்ளப்படாத தமிழ்க் கிறித்தவம் குறித்து இவர் மேற்கொண்ட ஆய்வுகள் முக்கியமானவை. ‘கிறித்தவமும் சாதியும்’, ‘கிறித்தவமும் தமிழ்ச் சூழலும்’ போன்ற நூல்கள் குறிப்பிடத் தகுந்தவை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டயப் படிப்பு முடித்த பின் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் பயிற்றுநராக 1967 ஜூலை முதல் 2001 மே வரை பணியாற்றிய ஆ. சிவசுப்பிரமணியன் முதுகலைப் பட்டமோ முனைவர் பட்டமோ பெற்றவரல்லர். ஆனால், அவருடைய ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் கல்விப் புல ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன. அவருடைய நூல்களிலிருந்து மேலைநாட்டு ஆய்வாளர்களும் தமிழ் நாட்டு ஆய்வாளர்களும் எடுத்தாளும் மேற்கோள்கள் ஏராளம். கல்விப்புலம் சார்ந்த, சாராத ஆய்வாளர்கள் பலர் இவரிடம் ஆய்வு தொடர்பாக விவாதித்துத் தமது ஆய்வுகளைச் செழுமைப்படுத்தி வருகின்றனர். உழைப்பும் நேர்மையும் கொண்ட பல ஆய்வாளர்களைத் தமிழ் ஆய்வுலகுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் ஆ. சிவசுப்பிரமணியன் செய்து வருகிறார்.

## நமது நெறி திருக்குறள்; நமது மதம் – மனித தர்மம்

# திருக்குறள்: பெரியார் கருத்து என்ன?

*பெரியார் திருக்குறளையே கடுமையாகக் கண்டித்தார் என்று பா.ஜ.க. – சங். பரிவாரங்கள் பேசி வருவதற்கு மறுப்பாக பெரியாரின் திருக்குறள் பற்றிய கருத்துகளின் ஒரு தொகுப்பு.*

- ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவர்க்கும் சிறப்பாக இந்த நாட்டுப் பழங்குடி மக்களான திராவிடர்கள் அனைவர்க்கும் வள்ளுவர் அருளிய ‘திருக்குறள்’ ஒரு பெரிய செல்வமேயாகும். நமது பெருமைக்கும் நெறிக்கும் நாகரிகத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக அதில் பல விவரங்களை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் திராவிட மக்களின் பெருமையை, திராவிடரல்லாத மக்களுக்கு உணரச் செய்ய முடிகிறது.

- நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத் தான் புரியும். அவர்களுக்குத்தான் பயன்படும். ஆனால், திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்குரிய தக்க ஆதாரமாய் அமைந்திருக்கிறது.

- திருக்குறள் ‘தெய்வீகத் தன்மை பொருந்திய’ ஒருவரால் எழுதப்பட்டது என்பதாகவோ அல்லது மனித சக்திக்கு மேற்பட்டவரால் சொல்லப் பட்டது என்பதாகவோ நாம் அதைப் போற்ற வில்லை. அதில் கூறப்பட்டுள்ள உயர்ந்த கருத்து களுக்காகத்தான் நாம் அதைப் போற்றுகிறோம் என்பதை நீங்கள் அனைவரும் உணர்தல் வேண்டும்.

- நம் பண்டைத் திராவிட மக்களிடையே இரண்டு பெரியார்களைக் குறிப்பிட வேண்டுமானால் ஆண்களில் திருவள்ளுவரையும், பெண்களில் அவ்வையாரையும் நாம் சிறந்த அறிவாளிகளாகக் குறிப்பிட முடியும்.

- திருக்குறள் ஆரியக் கொள்கைகளை மறுக்க, அவற்றை மடியச் செய்ய, அக்கொள்கைகளிலிருந்து மக்களைத் திருப்ப எழுதப்பட்ட நூல் என்றுதான் நான் கருதுகிறேன்.

- சுருங்கக் கூறினால் - புத்தர் செய்த வேலையைத் தான் திருக்குறள் செய்திருக்கிறது. புத்த தர்மமும் ஆரியத்திற்கு மாறான தர்மம்தான். அதனால்தான் அது இந்நாட்டு ஆரியர்களால் அழிக்கப்பட்டது. ஆரிய தர்மத்தை எதிர்த்து அழித்து ஒழிப்பதற்காகத்தான் திருக்குறள் பாடப்பட்டதென்பது, அதை ஆராய்ச்சி செய்வோர் எவருக்கும் விளங்காமற் போகாது.

- என்னைப் பொறுத்த வரையில் திருக்குறளைச் சிறிதாவது ஆராய்ச்சி செய்தவன் என்று என்னால் கூறிக் கொள்ள முடியாவிட்டாலும், அதன் பெருமையை நான் ஓர் அளவுக்காவது உணர்ந்திருக்கிறேனென்பதையும், அதன் மீது எனக்கு அளவற்ற பற்றுண்டு என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

- இன்ன காரியங்களினால் இன்ன வஸ்துக்கு இன்ன குணம் ஏற்படும் என்று கூறுவதுதான் பிரத்யட்ச அனுபவத்திற்கும் பின் விளைவுக்கும் ஏற்றதாக அமையக் கூடியது. தத்துவார்த்தம் கூறத் தேவையில்லாத கருத்து தான் விஞ்ஞானத்திற்கேற்ற கருத்தாகும். தத்துவார்த்தம் பேசுவதெல்லாம் பெரிதும் தம்முடைய சாமர்த்தியத்தைக் காட்டிக் கொள்ளச் சிலர் செய்யும் பித்தலாட்டம் என்றுதான் நான் கூறுவேன். திருக்குறளில் அத்தகைய தத்துவார்த்தப் பித்தலாட்டத்திற்கு இடமேயில்லை.

- திருக்குறளின் ஒவ்வொரு கருத்தும் ஒருவனின் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாகயிருக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையும் ஒவ்வொரு துறையும் அதில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது.

- திருக்குறளில் பொய், மெய்யாகவோ அல்லது மெய், பொய்யாகவோ கூறப்பட்டிருக்கவில்லை என்பதுதான் என் கருத்து.

- திருக்குறளில் - ஒரு அரசன், ஒரு விவசாயி, ஒரு வியாபாரி, ஒரு துறவி, ஒரு பொதுநலத் தொண்டர், ஒரு மந்திரி, ஒரு காதலன், ஒரு காதலி, ஒரு தலைவன், ஒரு தலைவி என சகலருக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்றில்கூட மூட நம்பிக்கை புகுத்தப்பட்டிருக்க வில்லை.



- திருக்குறள் ஆசிரியருக்குக் கடவுளைப் பற்றிக் கூட நம்பிக்கையில்லை.

- ‘பிராமணன்’ என்ற வார்த்தையைத் திருக்குறள் ஆசிரியர் எங்குமே உபயோகிக்கவே இல்லை.

- பார்ப்பான் என்று கூறினால்கூட நம்மவர்களில் சிலர் குற்றம் கூறுகிறார்கள். “டே அவன் பிராமணன்டா; அவனைப் பார்ப்பான் என்று கூறாதடா; அது தவறு என்று சொன்னால் நீங்கள் கேட்க வேண்டும். அப்போது நீ யாருடா?” என்று. இந்த ஞானமெல்லாம் 3 அணாத் திருக்குறளில் இருக்கிறது வாங்கிப் படியுங்கள்!

- ஒரு திருடன் களவாடினான் என்றால் அவன் எந்த நட்சத்திரத்தில் களவாடினான் என்பது சப்-இன்ஸ்பெக்டருக்குத் தெரிய வேண்டியதில்லை. அல்லது இமயமலையின் உயரம் என்னவென்பதும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கோ ஒரு தாசில்தார் வேலைக்கோ பி.ஏ. பட்டம் எம்.ஏ. பட்டம் தேவையில்லை. குறள் படிப்பே போதுமானது.

- திருவள்ளுவருடைய கொள்கைகளையும், அவருடைய பாட்டின் அருமையையும் அவற்றால் திராவிட நாடு பெற்றிருக்க வேண்டிய பலனையும் கம்பனது இராமாயணம் அடியோடு கெடுத்துவிட்டது. பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியான கம்பனால் இந்நாட்டில் நிலவியிருந்த திராவிடக் கலாச்சாரமே பாழாக்கப்பட்டுப் போய் விட்டது.

- குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியிருக்கிறது.

- குறளை முசுலீம்கள், கிறித்தவர்கள் உட்பட யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

- ஒவ்வொருவனும் தான் இந்துவல்ல ‘திராவிடனே-திருக்குறளனே’ என்று கூறிக் கொள்வதில் பெருமையடைய வேண்டும். விபூதியையும் நாமத்தையும் விட்டொழிக்க வேண்டும். புராணங்களைப் படிக்கக் கூடாது.

- என்ன மதம் என்றால் குறள் மதம். மனித தர்ம மதம் என்று சொல்லப் பழக வேண்டும்.

- கடவுளையும், மதத்தையும் எப்படி முட்டாள் தனமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டோமோ அதேபோன்று நீதி நூல்களிலும் நம்மை இழிவுபடுததும் இராமாயணம் - பாரதம் - கீதை போன்றவற்றை நம்பி வந்திருக்கிறோம். அதே சமயத்தில் உலகிற்கே பொதுவான அறிவு விளக்கத்தையும், அதற்கான அரசியல் முறைகளையும் மக்களின் வாழ்வு பற்றியும் எடுத்துக் கூறியுள்ள நமது திருக்குறளை நாம் மதிப்பதில்லை; படிப்பதுமில்லை.

- என்ன மதத்தினர் என்று கேட்டால், ‘வள்ளுவர் மதம்’ என்று சொல்லுங்கள். உங்கள் நெறியென்னவென்றால், ‘குறள் நெறி’ என்று சொல்லுங்கள். குறள் நெறி என்று சொல்வீராயின் உங்கள் முன் எந்த பிற்போக்குவாதியும், எப்படிப்பட்ட சூழ்ச்சிக்காரனும் முன் நிற்கக் கூசி ஓடிவிடுவான். குறளை எவனாலும் மறுத்துக் கூற முடியாது. அவ்வளவிற்கு இயற்கைக்கும் அறிவுக்கும் இயைந்ததாக இருக்கிறது அது. எனவே, குறளைப் படியுங்கள். அதன் வழிப்படி நடவுங்கள். அதையே எங்கும் பிரச்சாரம் செய்யுங்கள். உங்களுக்கு மனத் தூய்மை ஏற்படும். முன்னேற்ற அறிவில் ஆசையும் நம்பிக்கையும் ஏற்படும்.

- ஆரியப் பித்தலாட்டத்திற்குச் சரியான மருந்து சரியான மறுப்பு திருக்குறள்தான்.

- “குறளிலும் சிற்சில இடங்களில் ஆரியப் பண்பு கலப்பு இருக்கின்றது” என்று இன்று பல பெரியோர்கள் கருதுகிறார்கள். அதற்கேற்றபடி சில எடுத்துக்காட்டுகளையும் காட்டுகிறார்கள். ஏதோ சில இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்டவைகளை நாம் இக்காலத்துக்கும் குறளாசிரியரின் பெரும்பாலான கருத்துக்கும் ஒப்பிட்டுப் பார்த்து நல்ல கவலையுடன் சிந்தித்தோமேயானால் ஏதாவது நம் கருத்துக்கு ஏற்ற தெளிபொருள் விளங்கும் என்றே கருதுகிறேன். விளங்காவிட்டாலும் அவை குறளின் தத்துவத்துக்கு முரண்பாடானது என்றாவது தோன்றலாம். அதுவும் இல்லாவிட்டால் நம் பகுத்தறிவுப்படி பார்த்து, கொள்வதைக் கொண்டு விலக்குவதை விலக்கலாம்.

- திருவள்ளுவர் காலம் பொதுவுடைமைக் காலமோ சமதர்மக் காலமோ அல்ல. ஆனால் வள்ளுவர் சிறந்த பொதுவுடைமைக்காரராகவே விளங்குகிறார். அதனால் தான் நம் போற்றுதலுக்கு ஆளாகிறார்.

- குறளுக்கு இதுவரை கண்ட உரைகள் பல அவரவர்கள் கருத்துக்கு ஏற்ப கண்டவையாகவே காணப்படுகின்றன. ஆதலால், ஜாதி மத கடவுள் உணர்ச்சி கடந்து, இயற்கை உணர்ச்சியோடு பகுத்தறிவைக் கொண்டு நடுநிலையில் நின்று உரை கண்டால், அவ்வுரை மூலம் திராவிடர் கழகம் விரும்பும் கருத்துக்களைக் காணலாம். ஆதலால் குறளைப் போற்றுங்கள்! குறளைப் படியுங்கள்! குறள் உள்ளத்தைக் காணுங்கள்!

- எனவே, ஏப்ரல் 12ஆம் தேதியை குறள் நாளாகக் கொண்டாடுங்கள் என்று வேண்டிக் கொள்கிறேன்.

- இலவசமாய் வழங்கப் போகிறார் என்றால், இவர்கள் யாவரும் அவர்களுடைய கோட்பாடுகளுக்கு ஏற்ற முறையிலும் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள் அவர்களுடைய ஆதிக்கத்துக்கு ஏற்ற முறையிலும், உரைகள் - அர்த்தங்கள் புகுத்துவதற்குமேயல்லாமல், குறளின் உண்மையான தத்துவத்தை அதாவது வள்ளுவரின் உள்ளத்தை மக்கள் அறிந்து, அதன்வழி நடந்து, நன்மக்களாய் வாழ்வதற்காக அல்ல.

- ஒரு பெரிய மளிகைக் கடையிருந்தால், “இந்த ஊரிலேயே இதுதான் பெரிய மளிகைக் கடை. இங்கு சென்றால் தேவையான எந்தப் பொருளையும் பெற்றுக் கொள்ளலாம். யார் யாருக்கு எது எது தேவையோ, அதெல்லாம் ஏராளமாய் அங்கே இருக்கிறது. உனக்கு வேண்டுமானால் நீ போய் வாங்கிக் கொள்” என்று மளிகைச் சாமான் தேவைப்பட்ட ஒருவனுக்குக் கூறுவதுபோல, மக்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய யாவும் ஏராளமாய் குறளில் இருக்கிறது என்கிற அளவில்தானே ஒழிய அந்தக் கடையில் இருப்பதெல்லாம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதல்ல. அது போலவேதான். நான் குறளை நாடெங்கும் எடுத்துக்காட்ட முற்பட்டிருப்பதும், என்னைச் சார்ந்த கழகத் தோழர்கள் குறளைப் பற்றிய பிரச்சாரம் செய்வதுமாகும்.

- குறளுக்குள் கடவுள், மதம், ஜாதி, மோட்சம், முன்ஜென்மம் என்பவை போன்ற சொற்கள் இல்லவே இல்லை.

- ஆரியத்தை - மூட நம்பிக்கையை எதிர்த்துப் போராட வள்ளுவரின் குறள் நமக்குக் கேடயமாக இருக்கின்றது.

- திராவிடர்களுக்கு நீதி நூல் ஒன்றே ஒன்றுதான் உண்டு. அது திருக்குறளைத் தவிர வேறில்லை என்பதாக உறுதி கொண்டு, ஆரிய மத புராண இதிகாச நூல்களாகிய இராமாயணம் - கீதை - பாரதம் - புராணம் ஆகிய வைணவ, சைவ மத நூல்கள் ஆகியவற்றை அறவே ஒழித்துவிட வேண்டும். அவற்றை நாம் மதித்தல் கூடாது என்கிற உறுதிப்பாடு, நாட்டு மக்களுக்கு உண்டாக வேண்டும்.

- குறள் எப்படி மனுநீதிக்கு மறுப்பு நூல், குறள் எப்படி ஆரியத்திற்கு எதிர்ப்பு நூல், குறள் எப்படி பார்ப்பனியத்துக்கு சாவு மணி அடிக்கும் நூல் என்பது இதுகாறும் விளக்கப்பட்டது. இனி குறள் கருத்துகள் இந்நாடெங்கணும் பரப்பப்பட வேண்டிய அவசியத்தைக் கவனிப்போம்.

- குறளுக்கு சாற்றுக்கவி தந்த சங்கப் புலவர்கள் பலர் ஆரியக் கருத்தைக் கண்டிக்கவே குறள் எழுதப் பட்டது என்பதை தெள்ளத் தெளியக் கூறியுள்ளார்கள்.

- குறள் பாடிய வள்ளுவனாரையும், எங்கோ நள்ளிரவில் ஒரு சத்திரத்தில் ஒரு புலைச்சிக்கும் ஒரு பார்ப்பானுக்கும் நேரிட்ட கள்ள

4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் 11ஆவது சந்திப்பு



சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாத இதழான நிமிர்வோம் 11ஆவது வாசகர் வட்ட சந்திப்பு, தலைமை அலுவலகத்தில் 03.11.2019 அன்று மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது. நிகழ்விற்கு தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை வகித்தார். தேன்ராஜ் மற்றும் ராஜேஷ்குமார் முன்னிலை வகித்தனர். வாசகர் வட்டத்தின் நோக்கம் மற்றும் இனி வரும் காலங்களில் வாசகர் வட்ட சந்திப்புகள் குறித்து, நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் யுவராஜ் தொடக்கவுரையாற்றினார். அதைத் தொடர்ந்து, வாசகர் வட்டத்தின் முதல் அமர்வில், ‘இசை நாடகத் துறையில் பெரியார் இயக்கம் விளைவித்த கலகம்’ என்ற தலைப்பில் அருண்குமார், ‘உயர்ஜாதி - ஏழை இடஒதுக்கீடு குறித்து’ தினேஷ்குமார், ‘சாதியக் கொடுமையும் திராவிட இயக்கமும்’ என்ற தலைப்பில் ஊடகவியலாளரும் கழகத் தோழருமான பிரகாசும் உரையாற்றினார்கள். இரண்டாம் அமர்வில், சட்ட எரிப்பு போராட்டத்தின் பெருமை மிகு வரலாறு குறித்து தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் சீனி விடுதலையரசு சிறப்புரையாற்றினார். இறுதியாக ப.அருண்குமார் நன்றி கூறினார்.

நிகழ்வை நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் யுவராஜ் ஒருங்கிணைத்தார்.

## வணிக நிறுவன விளம்பரப் பலகைகளில் ஜாதிப் பெயர்களை நீக்கக் கோரும் இயக்கம்

# கல்லக்குறிச்சி மாவட்டக் கழகம் முடிவு



திராவிடர் விடுதலைக் கழக கல்லக்குறிச்சி மாவட்ட கலந்தாய்வு கூட்டம் 02.11.2019 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சங்கராபுரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் ந. அய்யனார் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் க. மதியழகன், மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை, மாவட்டச் செயலாளர் க. இராமர், மாவட்ட துணை செயலாளர் மு.நாகராசு, மாவட்ட அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ. முருகன், ந. வெற்றிவேல், அன்பு ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். கலந்தாய்வு கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கல்லக்குறிச்சி மாவட்டத்தில் அனைத்து சமுதாய (குமுகாய) மக்களும் நுகர்வோராக வணிகம் செய்கின்ற கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் விளம்பர பலகையில் எழுதப்பட்டுள்ள சாதி பெயர்களை அகற்றக்கோரி மக்கள் மத்தியில் தொடர் பிரச்சாரங்களை மேற்கொள்வதோடு சாதி பெயர் எழுதப்பட்டுள்ள வணிக நிறுவன உரிமையாளர்களிடம் சாதி பெயரை அகற்றக்கோரி வேண்டுகோள் வைப்பது என்று மாவட்ட கழகம் சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
2. மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் தென்பெண்ணை ஆற்றில் கலப்பதால் ஆற்று நீரை விவசாயத்திற்கும் மற்றும் ஆடுமாடுகள் குடிப்பதற்கும் பயன்படுத்த முடியவில்லை. எனவே தமிழக அரசு உடனடியாக தலையிட்டு ஆலை கழிவு நீர் ஆற்றில் கலப்பதை தடை செய்வதோடு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தென்பெண்ணை ஆற்றில் பல தடுப்பணைகள் கட்டி தண்ணீரை தேக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி கவன ஈர்ப்பு ஆர்பாட்டங்கள் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.
3. கழக வார ஏடாகிய “புரட்சி பெரியார் முழக்கம்” மற்றும் மாத இதழாகிய “நிமிர்வோம்” ஆகிய இரண்டிற்கும் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக அளவில் வாசிப்பாளர்களை (சந்தாதாரர்கள்) சேர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது

# மேற்கு மண்டல கழகக் கலந்துரையாடலின் முடிவுகள்



திராவிடர் விடுதலைக் கழக சத்தியமங்கலம் நகர அமைப்பாளர் மூர்த்தி - பூங்கொடி இல்லத் திறப்பு விழா கெம்பநாயக்கன்பாளையம் சத்தியில், 03.11.2019 அன்று காலை 10 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு தெற்கு, வடக்கு, கோவை திருப்பூர் மாவட்டத் தோழர்கள் பெருந்திரளாய் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

திராவிடர் விடுதலைக் கழக மேற்கு மண்டல கலந்துரையாடல் கூட்டம் 3.11.2019 அன்று சத்தி கெம்பநாயக்கம் பாளையம் திரு. கிட்டுசாமி தோட்டத்தில் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமையேற்று நோக்கவுரை ஆற்றினார்.

கழகத்தின் அடுத்த செயல் திட்டமாக மக்கள் சந்திப்பு இயக்கமும், கிராமங்கள் தோறும் பரப்புரைப் பயணமும், மருத்துவ முகாம் மற்றும் சட்ட ஆலோசனை முகாம் உள்ளிட்டவைகளை நடத்த ஆலோசனை வழங்கினார்.

கழக மாநில பொறுப்பாளர்கள் மற்றும் மேற்கு மண்டலம் உள்ளடக்கிய ஈரோடு தெற்கு, வடக்கு, கோவை புறநகர், கோவை, நாமக்கல் மற்றும் திருப்பூர் மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்ட பொறுப்பாளர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பினை நடத்துவது பற்றி விளக்கினார்.

தோழர்களின் கருத்துக்களை செவிமடுத்து இறுதியில் கழக தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

கழகப் பொறுப்பாளர்களுக்கு 3 நாட்கள் சிறப்பு பயிற்சி வகுப்பு நடத்துவதெனவும் மக்கள் சந்திப்பு இயக்கம் நடத்துவதெனவும் அறிவித்தார். மற்றும் டிசம்பர் இறுதியில் நீலச் சட்டை பேரணி மற்றும் ஜாதி ஒழிப்பு மாநாட்டிற்கு மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை முன்னெடுக்கவும் அறிவுறுத்தினார்.

## அரசுப் பேருந்துகளில் மத சுவரொட்டிகளை அகற்றக் கோரி கோவை கழகம் மனு

அரசுப் பேருந்துகளில் திட்டமிட்டு ஒட்டப்பட்டுள்ள மத அடையாள சுவரொட்டிகளை அகற்றுமாறு 16.10.2019 அன்று அரசு போக்குவரத்து கழகக் கோவை மாவட்ட மேலாண் இயக்குநரைச் சந்தித்து கோவை திவிக சார்பில் நேருதாஸ் தலைமையில் மனு அளிக்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட மேலாண் இயக்குநர், அப்படி இருந்தால் தவறு தான் நிச்சயம் இதன் பெயரில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். உடன் கலந்து கொண்ட தோழர்கள்: ஃபெரோஸ், வேல்முருகன் புஇக, இராவணன் தமிழ்ப் புலிகள், அஸ்வின் புஇமு, ஜின்னா.

## வில்வித்தையில் தங்கப்பதக்கம் பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பாராட்டு



திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள் தமிழரசி-கொளத்தூர் குமார் ஆகியோரின் மகன் இனியன், காவலாண்டியூர் கலைச்செல்வி-விஜயகுமார் ஆகியோரின் மகன் வளவன், அக்டோபர் 5, 6 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு வில்வித்தை சங்கம் (TAAT) நடத்திய மாநில அளவிலான வில்வித்தைப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றனர். அவர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அழைத்துப் பாராட்டினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

புணர்ச்சியில் தோன்றிய பிள்ளையாக்கி, அதன் மூலம் அவரை சண்டாளராக்கி, அவருடைய வாக்குக்கு மதிப்பில்லாமற்படி செய்து விட்டார்கள். ஆரியத்தைக் கண்டித்தார் என்பதற்காகவே அவரைச் சண்டாளராக்கி விட்டார்கள் இச்சதிகார ஆரியர்கள்.

- 1330 பாட்டுகளிலும் ஓர் இடத்திலாவது ‘இந்து’ என்ற சொல் காணப்படவேயில்லை.

**(பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்ட ‘திருவள்ளுவர் 2050 ஆண்டுகள் அடைவுகள்’ நூலிலிருந்து)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th November 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN